# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 100 | 4 Pages | 12.11.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 100 | 4 பக்கங்கள் | 12.11.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## வாணியம்பாடி விபத்து எதிர்ரொலி ஓட்டுநர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரை

சென்னை, நவ.12

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அருகே பேருந்து விபத்தில் 6 பேர் உயிரிழந்த நிலையில் ஓட்டுநர்களுக்கு சில அறிவுரைகளை வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

அனைத்து ஓட்டுநர்களும் பேருந்துகளை கவனமாக இயக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு போக்குவரத்து மண்டலங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து துணை அமைச்சர் சிவசங்கரிடம், விபத்து குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியுள்ளார்.



பேருந்துகளை இயக்கும்போது, பயணிகளை பத்திரமாகவும், கவனமாகவும் அழைத்து செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

பேருந்துகளை குறிப்பிட்ட வேக வரம்பிற்கு கட்டுப்பட்டு இயக்குமாறு ஓட்டுநர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

## தலைநகர் டெல்லியில் லேசான நில அதிர்வு




டெல்லி, நவ.12

டெல்லியில் லேசான நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. இன்று பிற்பகல் 3.36 மணியளவில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. ரிக்டர் அளவு கோலில் 2.6 ஆக பதிவாகியுள்ளது. இந்த நில அதிர்வு வடக்கு மாவட்டத்தில் பூமிக்கு அடியில் 10 கி.மீ., ஆழத்தில் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. நில அதிர்வால் யாருக்கும் பாதிப்பில்லை என தகவல் வெளியாகியுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு, மேற்கு நேபாளத்தில் 5.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து, டெல்லி, தேசிய தலைநகர் பகுதி மற்றும் வட இந்தியாவின் பல பகுதிகளில் நிலநடுக்கம் உணரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## காற்று மாசு எதிரொலி நடைப்பயிற்சி, உடற்பயிற்சியை தவிர்க்க டெல்லி மக்களுக்கு ஆலோசனை

டெல்லி, நவ.12

டெல்லியில் காற்று மாசு அதிகரித்து வருகிறது. இதனால், மூச்சுத் திணறல் போன்ற உடல் உபாதைகளால் பொது மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். அதனால், வாகனங்களில் இரட்டை இலக்க திட்டம் போன்ற நடவடிக்கைகளை டெல்லி அரசு எடுத்தது.

தீபாவளி நெருங்கி வரும் நிலையில், காற்று மாசு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் டெல்லி சுகாதாரத்துறை பொது மக்களுக்கு சில ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

அதன்படி, பொது மக்கள் காலை நடைபயிற்சியைத் தவிர்ப்பது முதல் பட்டாசு வெடிக்க வேண்டாம் என்று வரை டெல்லியில் மாசுபாட்டைக் கருத்தில் கொண்டு பல நடவடிக்கைகளை அறிவுறுத்தியுள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள், அடிப்படை உடல் உபாதைகள் உள்ள நோயாளிகள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் மற்றும் காற்று மாசுபாட்டின் வெளிப்பாட்டைத் தவிர்க்க வேண்டும் என்று அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

இன்று காலை 7 மணியளவில், தலைநகரின் காற்றின் தரக் குறியீடு 219ஆக இருந்தது. இது கடந்த வியாழன் 24 மணி நேர சராசரி 437 உடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகும். ஆக்டோபர் 28ம் தேதி முதல் நகரம் இரண்டு வாரங்களுக்கு "மிகவும் மோசமான" முதல் "கடுமையான" காற்றின் தரத்தை அனுபவித்தது.

தீபாவளியைத் தொடர்ந்து காற்றின்தரம் மோசமடையும் என்பதால், டெல்லி அரசின் சுகாதார சேவைகள் இயக்குநரகம் வெளியிட்டுள்ள பொது சுகாதார ஆலோசனையானது பட்டாசுகளை எரிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மெதுவான மற்றும் அதிக போக்குவரத்து சாலைகள், மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு அருகிலுள்ள பகுதிகள், கட்டுமானம்/இடிக்கும் இடங்கள் போன்ற அதிக காற்று மாசு உள்ள இடங்களைத் தவிர்க்கவும். வெளியில் காலை மற்றும் மாலை நடைப்பயிற்சி, ஜாக், ஓட்டம், உடற்பயிற்சி, குறிப்பாக கடுமையான காற்றின் தரக் குறியீடு உள்ள நாட்களில் தவிர்க்கவும்.

புகையிலை பொருட்களை புகைபிடிக்க வேண்டாம், மூடிய வளாகங்களில் கொசுவர்த்திகள் மற்றும் தூபக் குச்சிகளை எரிப்பதைத் தவிர்க்கவும். மரம், இலைகள், கழிவுகளை எரிப்பதைத் தவிர்க்கவும் அறிவுறுத்துகிறது.

மக்கள் தங்கள் கண்களை ஓடும் நீரில் கழுவவும், வெதுவெதுப்பான நீரில் அடிக்கடி வாய் கொப்பளிக்கவும், பழங்கள் மற்றும் காய்கறிகள் உட்பட ஆரோக்கியமான மற்றும் சீரான உணவை உண்ணவும் அறிவுறுத்துகிறது.

மூச்சுத்திணறல், மயக்கம், இருமல், மார்பு அசௌகரியம் அல்லது வலி, கண்களில் எரிச்சல் (சிவப்பு அல்லது நீர்நிலை), பொது போக்குவரத்து அல்லது கார் குளங்களைப் பயன்படுத்துதல், வீடுகள் மற்றும் பணியிடங்களுக்குள் பெறுக்குவதற்கு பதிலாக ஈரமான துணிகளைக் கொண்டு அடிக்கடி துடைப்பதை வழக்கமாக செய்யுங்கள்.

அடிப்படை மருத்துவ நிலைமைகளைக் கொண்ட நோயாளிகள் குறிப்பாக நீண்டகால நுரையீரல் மற்றும் இருதய பிரச்சினைகள், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் டெல்லி சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

## தீபாவளிக்கு பிறகு வருகிறதா பொது சிவில் சட்டம்?




டெல்லி, நவ.12

நவம்பர்12,நாடுமுழுவதும்தீபாவளிபண்டிகைகொண்டாடப்படுகிறது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் தீபாவளி பண்டிகைக்கு பிறகு ஒரு வாரத்தில் சட்டசபையின் சிறப்பு தொடர் கூட்டப்பட உள்ளது.

இந்த கூட்டத்தொடரிலேயே பொது சிவில் சட்டம் (Uniform Civil Code) அமல்படுத்தும் முயற்சி எடுக்கப்பட உள்ளதாகவும், அதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மசோதாவிற்கான வரைவில் இடம்பெறும் பல அம்சங்கள் குறித்து தகவல்கள் வெளியாகி உள்ளன.

அனைத்து மதங்களுக்கும் பொதுவான பாலின சம உரிமை, பூர்வீக சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உட்பட திருமணம், விவாகரத்து, பரம்பரை சொத்துரிமை, தத்து எடுத்தல் ஆகிய முக்கிய விஷயங்கள் இந்த சட்டத்தின் மைய பொருளாக இருப்பதாக தெரிகிறது.

பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது 18லிருந்து 21 என அதிகரிக்கப்படும் என முன்னர் தகவல்கள் வெளியாகி இருந்தன. ஆனால், திருமண வயது 18 என்பதில் இந்த சட்டத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என தற்போது தெரிகிறது.

இருதார மற்றும் பலதார தடை, 'லிவ்இன்' வாழ்கை முறையை கட்டாய பதிவு செய்தல் ஆகியவை இதில் அடங்கும் என்பதால் இந்த மசோதா சட்டமாவதற்கு முன் பல காரசார விவாதங்களுக்கு வழிவகுக்கும் என நம்பப்படுகிறது.

## அம்பை அருகே பண்ணைபள்ளி வயல் தின விழா

அம்பை, நவ.12

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) முகமையின் கீழ் அம்பை அருகே உள்ள வெள்ளங்குளி கிராமத்தில் நெற்பயிரில் வேளாண் சுற்றுச் சூழல் பகுப்பாய்வு பண்ணைப்பள்ளி மற்றும் வயல் தின விழா நிகழ்ச்சி நடை பெற்றது. நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் முருகானந்தம் கலந்து கொண்டார்.

வெள்ளங்குளி ஊராட்சி மன்ற தலைவர் முருகன் பேசுகையில் நம் ஊராட்சியில் உள்ள அனைத்து விவசாயிகளும் வேளாண்மைத்துறை திட்டங்களை கேட்டு தெரிந்து கொண்டு பயன்பெற வேண்டும்எனகேட்டுக்கொண்டார். முன்னதாக அம்பாசமுத்திரம்



வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கற்பகராஜ்குமார் வரவேற்றுபேசினார். ஆறுகட்டமாக நடைபெற்ற பண்ணை பள்ளியில் விதை முதல் விதை வரை உள்ள அறுவடை தொழில் நுட்பங்களை அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர்கள் ஆல்வின் மற்றும் ரஜினி மாலா ஆகியோர் எடுத்துரைத்தார்கள்.

முடிவில் 25 விவசாயிகளுக்கு இடுபொருட்களை வேளாண்மை இணை இயக்குநர் வழங்கினார். வேளாண்மை துணை அலுவலர் திவார்பக்கீர்மைதீன்நன்றிகூறினார். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஈழவணி, உதவி வேளாண்மை அலுவார் விஜயலெட்சுமி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் தங்கசரவணன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் செய்திருந்தனர்.

## ஒகேனக்கல்லில் பரிசல் இயக்க அனுமதி

ஒகேனக்கல், நவ.12

காவிரி நீர் பிடிப்பு பகுதி களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 14 ஆயிரம் கன அடி வரை அதிகரித்தது. இதனைத் தொடர்ந்து மழையின் அளவு குறைந்த தன் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக குறையத் தொடங்கி கடந்த இரு தினங்களுக்கு முன்பு 11 ஆயிரம் கன அடியாக சரிந்தது. இந்த நிலையில் ஒகேனக்–கல்லில் நேற்று நிலவரப்படி 7,500 கன அடியாக குறைந்த நீர்வரத்து இன்றும் அதே அளவில் நீடித்து வருகிறது.

இதனைத்தொடர்ந்து ஒகேனக்கல் மெயின்அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் ஆகிய அருவிகளில் தண்ணீர் சீறிபாய்ந்து சென்றது.



ஒகேனக்கல்லில் நீர்வரத்து கடந்த சில தினங்களுக்கு முன்பு 14 ஆயிரம் கனஅடி அளவில் அதிகரித்ததால் சுற்றுலா பணிக ளின் பாதுகாப்பு கருதி மாவட்ட நிர்வாகம் கடந்த பரிசல்இயக்கதடை விதித்திருந்தது. இதனைத் தொடர்ந்து இன்றும் 7,500 கன அடியாக நீர்வரத்து தொடர்ந்து நீடித்து வருவதால் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகத்தால் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு பரிசல் இயக்க அனுமதி வழங்கப்பட்டது. தீபாவளியையொட்டி இன்று ஒகேனக்கல்லில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அவர்கள் பரிசலில் சவாரி செய்து மகிழ்ந்தனர்.

சுற்றுலா பயணிகள் எண்ணை மசாஜ் செய்து கொண்டு மெயின் அருவி, காவிரி ஆற்றங்கரையோரம் ஆகிய பகுதிகளில் குளித்தும், அங்குள்ள மீன் கடைகளில் மீன்களை ருசித்தும் மகிழ்ந்தனர்.




# மங்கலம் ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு தீபாவளி பரிசு

மங்கலம், நவ.12

தீபாவளி பண்டிகையையொட்டி திருப்பூர் மாவட்டம்,மங்கலம் ஊராட்சியில் பணியாற்றும் தூய்மைபணியாளர்கள், தண்ணீர் திறப்பாளர்களுக்கு தீபாவளி பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தூய்மை பணியாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தீபாவளிபரிசை மங்கலம் ஊராட்சி மன்றத்தலைவர் எஸ்.எம்.பி.மூர்த்தி வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.



தீபாவளி பரிசு வழங்கும் நிகழ்ச்சியில் மங்கலம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் தாஹாநசீர், திருப்பூர் ஒன்றிய குழு உறுப்பினர் ஜானகி எபிசியண்ட்மணி, மங்கலம் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்களான முகமது

இத்ரீஸ், ராதாநந்தகுமார், ராஜாபரமேஸ்வரன், ரபிதீன், பால்ராஜ், அர்ஜுனன், மங்கலம் ஊராட்சி செயலாளர் நாகராஜ் மற்றும் மங்கலம் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் , மங்கலம் ஊராட்சி பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தீபாவளிக்கு கடன் வாங்கும் நிலை போக்குவரத்து கழக தொழிலாளர்கள் குமுறல்

சென்னை, நவ.12

தீபாவளிக்கு அரசு ஊழியர்கள், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக பணியாளர்கள், போக்குவரத்து கழக தொழிலாளர்கள், டாஸ்மாக் ஊழியர்கள் உள்ளிட்டோர்களுக்கு தமிழக அரசு போனஸ் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் நாளை தீபாவளி கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில் போக்குவரத்து கழக தொழிலாளர்களின் தீபாவளி போனஸில் அனுமதியின்றி பிடித்தம் செய்யப்படுவதால் தொழிலாளர்கள் பண்டிகைக்காக கடன் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

அதனால் போக்குவரத்து கழக தொழிலாளர்களின் தீபாவளி போனஸில் அனுமதியின்றி பிடித்தம் செய்ய தடை விதிக்க கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது போக்குவரத்து கழக தொழிலாளர்களின் வாதங்களை கேட்ட உயர் நீதிமன்றம் இதுதொடர்பாக தமிழக அரசு, போக்குவரத்து கழகங்கள் 2 வாரங்களில் பதிலளிக்க அளிக்க உத்தரவிட்டது.

# சாமளாபுரம் பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடை மற்றும் இனிப்பு

சாமளாபுரம், நவ.12

கலைஞரின் நூற்றாண்டு விழா தீபாவளி பண்டிகையையொட்டி சாமளாபுரம் தி.மு.க. பேரூர் செயலாளரும், சாமளாபுரம் பேரூராட்சி மன்ற 5வது வார்டு கவுன்சிலருமான பி.வேலுச்சாமியின் ஏற்பாட்டில் சாமளாபுரம் பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடை இனிப்புவழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியை சாமளாபுரம்பேரூர்செயலாளர் வேலுச்சாமி தொடங்கி வைத்தார்.



இந்த நிகழ்ச்சியில் சாமளாபுரம் பேரூராட்சி மன்ற 11வது வார்டு கவுன்சிலர் வினோஜ்தயாளன், 2வது வார்டு பட்டீஸ்வரன், 10வது வார்டு கனகசபாபதி, 4வது வார்டு பிரதிநிதி கதிரேசன் மற்றும் நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.இந்த நிகழ்ச்சியில் 60க்கும் மே தீபாவளிக்கு கடன் வாங்கும் நிலை போக்குவரத்து கழக தொழிலாளர்கள் குமுறல் ற்பட்டோருக்கு புத்தாடை மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நிலைய அலுவலர் மணிகண்டன் தலைமையில்தீயணைப்பு நிலைய வீரர்கள் கலந்து கொண்டு பயிற்சியை செய்து காண்பித்தனர்.

# செல்போனுக்கு குறுஞ்செய்தி அனுப்பி வரி ஆலோசகர் உட்பட 2 பேரிடம் ரூ.68 லட்சம் மோசடி

கிருஷ்ணகிரி, நவ.12

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அருகேயுள்ள அலசநத்தம் ஜெய் நகர் பகுதியை சேர்ந்தவர் விஜயகுமார். இவரதுமகன்தியாகராஜன் இவர் வரி ஆலோசகராக வேலைபார்த்துவருகிறார். இந்த நிலையில் கடந்த ஆகஸ்டு 25ந்தேதி இவரது செல்போன் எண்ணுக்கு ஒருதனியார்நிறுவனத்தின் பேரில் ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதில் பகுதி நேர வேலை வாய்ப்பு உள்ளது. அதற்கு விண்ணப்பித்து முதலீடு செய்தால் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்று அதில் கூறப்பட்டு இருந்தது.

இதனை தொடர்ந்து அந்த குறுஞ்செய்தியில் இருந்த செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு தியாகராஜன் பேசியுள்ளார். அப்போது அவரிடம் பேசிய நபர் ஒரு வங்கி கணக்கு எண்ணை கொடுத்து அதில் பணம் செலுத்த சொல்லி உள்ளார்.

அதன்படி ரூ.59,11,250 லட்சம் பணத்தை செலுத்தியுள்ளார். இதனையடுத்து சில நாட்கள் கழித்து அந்த நபரின் செல்போன் எண்ணுக்கு தொடர்பு கொள்ளமுயற்சித்தபோது முடிய வில்லை. பின்னர் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த தியாகராஜன் இது குறித்து கிருஷ்ணகிரி சைபர் கிரைம் போலீசாரிடம் புகார் அளித்தார். அதன் பேரில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதே போன்று கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தகிரி அருகேயுள்ள பொதிகை நகர் பகுதியை சேர்ந்தவர் சக்கரவர்த்தி இவரது மகன் பரந்தாமன். இவர் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வருகிறார்.இந்தநிலையில் இவரது வாட்ஸ்ஆப்பில் வந்த குறுஞ்செய்தியில் சாப்ட்வேர் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு உள்ளதாகவும் அதில் விண்ணப்பித்து முதலீடு செய்தால் லட்ச கணக்கில் பணம் சம்பாதிக்கலாம் என்று கூறப்பட்டு இருந்தது. இதனையடுத்து பரந்தாமன் அதில் இருந்த செல்போன் எண்ணில் பேசி விவரம் கேட்டுள்ளார்.


அப்போது போனில் பேசிய மர்ம நபர் சொன்ன வங்கி கணக்கில் ரூ.8,88,000 லட்சம் பணத்தை செலுத்தியுள்ளார். பின்னர் அந்த செல்போன் எண்ணை தொடர்பு கொண்டு பேச முயன்ற போது முடிய வில்லை. இது குறித்து கிருஷ்ணகிரி சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார். இந்த 2 மோசடி வழக்குகள் குறித்தும் கிருஷ்ணகிரி சைபர் கிரைம் போலீஸ் இன்ஸ்பெக்டர் காந்திமதி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். படித்த பட்டதாரிவாலிபர்களிடம் ஆன்லைன் மூலமாக ரூ.68 லட்சம் மோசடி நடந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நேற்று முன் தினம் பெண் உள்ளிட்ட 3 பேரிடம் இதே பாணியில் ரூ.57.87 லட்சம் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# காங்கயம் தீயணைப்பு நிலையம் சார்பில் விபத்தில்லா தீபாவளி கொண்டாட பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

காங்கயம், நவ.12

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, தீ விபத்து இல்லாத தீபாவளி மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு காங்கயம் தீயணைப்பு துறையினர் சார்பில் காங்கயம் அருகே உள்ள தனியார் பள்ளி மாணவ, மாணவிகள் முன்னிலையில் போலி ஒத்திகை பயிற்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் நிலைய அலுவலர் மணிகண்டன் தலைமையில் தீயணைப்பு நிலைய வீரர்கள்கலந்து கொண்டு பயிற்சியை செய்து காண்பித்தனர்.



இதில் பட்டாசுகள் திறந்தவெளியில் கூரை வீடுகள் இல்லாத இடங்களில் வெடிக்க வேண்டும். கைக்குழந்தைகள் இருக்கும் வீடுகள் அருகில் பட்டாசுகள் வெடிக்க கூடாது. எண்ணெய்சேமிக்கும்குடோன்கள், தேங்காய் பருப்பு குடோன்கள், பெட்ரோல் பங்குகள் இருக்கும் இடங்களில் பட்டாசுகள் வெடிக்க கூடாது. கையில் வைத்து பட்டாசுகளை வெடிக்கக்கூடாது.

சிறியவர்கள் பட்டாசு வெடிக்கும் போது பெரியவர்கள் உடன் இருந்து கண்காணிக்க வேண்டும். ஆகிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இதில் பள்ளி மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அரூர் அருகே பெண்ணிடம் செயின் பறிப்பு

தருமபுரி, நவ.12

தருமபுரி மாவட்டம் அரூர் அருகேயுள்ள கே. வேட்ரப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் பொன்னுசாமி. இவரது மகன் அறவேந்தன்(37). இவர் தனது வீட்டுக்கு அருகே மளிகை கடை வைத்து நடத்திவருகிறார். இதனை இவரது தாயும், தம்பியும் சேர்ந்து வியாபாரம் பார்த்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று இரவு 7 மணியளவில் அறவேந்தன் தாய் மட்டும் கடையில் இருந்துள்ளார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த 2 பேர் கடையில் இருந்த பெண்ணிடம் சாமன் வாங்குவது போல பாவனை செய்து உள்ளனர்.

அவர்கள் கேட்ட பொருளை எடுத்து கொண்டு அவர்கள் அருகில் வந்த போது அவர் கழுத்தில் அணிந்து இருந்த செயினை பறித்து சென்றனர். இது குறித்து அறவேந்தன் அளித்த புகாரின் பேரில் அரூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# அரசு மருத்துவமனையில் தேசிய ஆயுர்வேத தினம்

சென்னை, நவ.12

தீபாவளிக்கு அரசு ஊழியர்கள், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக பணியாளர்கள், போக்குவரத்து கழக தொழிலாளர்கள், டாஸ்மாக் ஊழியர்கள் உள்ளிட்டோர்களுக்கு தமிழக அரசு போனஸ் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் நாளை தீபாவளி கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில் போக்குவரத்து கழக தொழிலாளர்களின் தீபாவளி போனஸில் அனுமதியின்றி



பிடித்தம் செய்யப்படுவதால் தொழிலாளர்கள் பண்டிகைக்காக கடன் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

அதனால் போக்குவரத்து கழக தொழிலாளர்களின் தீபாவளி போனஸில் அனுமதியின்றி பிடித்தம் செய்ய தடை விதிக்க கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது போக்குவரத்து கழக தொழிலாளர்களின் வாதங்களை கேட்ட உயர் நீதிமன்றம் இதுதொடர்பாக தமிழக அரசு, போக்குவரத்து கழகங்கள் 2 வாரங்களில் பதிலளிக்க அளிக்க உத்தரவிட்டது.

# தஞ்சையில் ஆயுர்வேத மருத்துவ முகாம்

தஞ்சாவூர், நவ.12

இந்தியா மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை 8 வது தேசிய ஆயுர்வேததினத்தைமுன்னிட்டு தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை ஆயுர்வேத மருத்துவப்பிரிவால் நடத்தப்படும் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் தஞ்சை வடக்கு வீதியில் நடை பெற்றது.

முகாமிற்கு எம்.எல்.ஏ.க்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி. நீலமேகம் ஆகியோர் தலைமை தாங்கினர்.

தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.



இதில் அனைத்து மூட்டு வலி மற்றும் எலும்பு சம்பந்தப்பட்ட நோய்கள் சளி, இருமல், ஆஸ்துமா, ஜூரம் உள்ளிட்ட சுவாசக் கோளாறுகள் சொறி, சிரங்கு, அரிப்பு உள்ளிட்ட அனைத்து தோல் நோய்கள், இதயம் மட்டும் மூளை சம்பந்தப்பட்ட நோய்கள், உடல் பலஹீனம், ரத்தச் சோகை, ஆண்மைக்குறைவு உள்ளிட்ட அனைத்து நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள், கருப்பைக்கோளாறு மற்றும் பெண்களுக்கான நோய்கள், அயிற்றுப்புண், பசியின்மை, மலச்சிக்கல் உள்ளிட்ட செரிமானக் கோளாறுகள், சர்க்கரை, உப்பு நீர், இரத்தக் கொதிப்பு மற்றும் சிறுநீரகக் கோளாறுகள், உள்ளிட்ட நோய்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு சித்த மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டது.

முகாமில் சித்த அலுவலர் குணசேகரன், தஞ்சை மருத்துவ கல்லூரி ஆயுர்வேத மருத்துவர் கஜேந்திரன், மூத்த ஆயுர்வேத மருத்துவர் நாராயணன் சங்கீதா ஆயுர்வேத மருத்துவர் பபிதா, கிருத்திகா யோகா மருத்துவர் பழனி சாமி, மற்றும் ஆறுமுகம் கலியமூர்த்தி, பொதுக் குழு உறுப்பினர் தர்மராஜன், பகுதி செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், இந்திரஜித், மண்டல தலைவர் புண்ணியமூர்த்தி, சதாசிவம் மற்றும் ஆயுர்வேத துறையைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பெருந்தலைவர் மக்கள் கட்சி சார்பில் தீபாவளி விழா




திருவள்ளூர், நவ.12

பெருந்தலைவர் மக்கள் கட்சி சார்பில் திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் ஆங்காடு ஊராட்சிக்குட்பட்ட பன்னீர்வாக்கம் கிராமத்தில் தீபாவளி கொண்டாட்டம் நடைபெற்றது. பெருந்தலைவர் மக்கள் கட்சித்தலைவர் என்.ஆர்.தனபாலன் கலந்து கொண்டு 200க்கும் மேற்பட்ட பெண்களுக்கு தலா 3 கிலோ அரிசி, புடவை, மதிய உணவு வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஆங்காடு ஊராட்சி மன்றத் தலைவர் கிரிஜா நித்யானந்தம், துணைத் தலைவர் மதன்ராஜ், செயலாளர் தனசேகர், பன்னீர்வாக்கம் பகுதி முன்னாள் வார்டு உறுப்பினர் மோகன், பெருந்தலைவர் மக்கள் கட்சி மாநில செயலாளர் எம்.வி.எம். ரமேஷ்குமார், தலைமை நிலைய செயலாளர் ஆர். சிவகுமார், செய்தி தொடர்பாளர்ஜி.சந்தானம், நிர்வாகிகள் டி.உதயகுமார், கே.காமராஜ், நல்லதம்பி, எடப்பாளையம் செந்தில்குமார், மகாராஜன், இலங்காமணி, காந்திநகர் அந்தோணி, தட்சிணாமூர்த்தி, ஆனந்தகண்ணன், எம். வைகுண்டராஜா,பாபாஜி, முருகேச பாண்டி, முருகக்கனி, முகமது அப்துல்காதர், சங்கரலிங்கம், சண்முகம், ஆர்.பாலமுருகன், சுப்பிரமணி, ராஜ்நாடார், சீனிப் பாண்டியன், ஆண்டனி பீட்டர், உத்திரகுமார், ரமேஷ், சுரேஷ், வண்ணை மோகன், எம்.எம்.டி.ஏ.பாலமுருகன், ரமேஷ், மடிப்பாக்கம் ரவி, சி.பி.செல்வன், செல்வபாண்டி, ஆத்திசாமி, டாக்டர் பிரேம்சந்த், காசிராஜன், வசந்தகுமார் கலந்து கொண்டனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# தேய்பிறை பிரதோஷ சிறப்பு வழிபாடு

தருமபுரி, நவ.12

தருமபுரி நகரில் பிரசித்தி பெற்ற கோட்டை கல்யாண காமாட்சி அம்மன் உடனாகிய மல்லிகார்ஜுனசாமி கோவிலில், ஐப்பசி மாதம் பிரதோஷ சிறப்பு வழிபாடு நேற்று மாலை நடைபெற்றது. முதலில் மூலவருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து நந்திக்கு பல்வேறு வகையான வாசனை திரவியங்கள்மற்றும்பழங்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றது. தொடர்ந்து மூலவருக்கும் சிறப்பு ஆராதனைகள் மற்றும் உபகார பூஜைகளும், தொடர்ந்து மகா தீபாராதனை நடைபெற்றது.

பின்னர் கோவில் வளாகத்திலேயே சாமி திருவீதி உலா நடைபெற்றது. இந்த சிறப்பு வழிபாட்டில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்த வழிபாட்டையொட்டி பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதம் வழங்கப்பட்டது.



இதே போன்று தருமபுரி நெசவாளர் நகரில் உள்ள மங்களாம்பிகை உடனாகிய மகாலிங்கேஸ்வரர் கோவிலில் பிரதோஷத்தை முன்னிட்டு நந்தி மற்றும் மகாலிங்கேஸ்வரருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடை பெற்றது. இதில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதம் வழங்கப்பட்டது.

தருமபுரி குமாரசாமிப்பேட்டை சிவகாமசுந்தரி உடனாகிய ஆனந்த நடராஜர் கோவில், தருமபுரி கடைவீதி அங்காள பரமேஸ்வரி அம்மன் உடனாகிய மருதவாணேஸ்வரர் கோவில், தீயணைப்பு நிலைய வளாகத்தில் உள்ள பிரக தாம்பாள் சமேத அருளீஸ்வரர் கோவில், அன்னசாகரம் சோமேஸ்வரர் கோவில், சவுலுப்பட்டி ஆதி லிங்கேஸ்வரர் கோவில் உள்ளிட்ட தருமபுரி நகரை சுற்றியுள்ள அனைத்து சிவன் கோவில்களிலும் புரட்டாசி மாத தேய்பிறை பிரதோஷ சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

அதேபோல் பிரசித்தி பெற்ற பையர்நத்தம் அமிர்தேஸ்வரர் கோவிலில் ஐப்பசி மாத பிரதோஷ சிறப்பாக நடைபெற்றது. தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் பையர்நத்தம் கிராமத்தில், மயிலை மலை ஸ்ரீ பாலமுருகன் கோவில் உள்ளது. இந்த மலைக்கோயில்அடிவாரத்தில்எழுந்தருளியுள்ள அமிர்தே ஸ்வரர், அன்னை அமிர்தாம்பிகை கோவிலில் ஐப்பசி மாத தேய்பிறை பிரதோஷத்தையொட்டி பக்தர்கள் வழிபட்டனர்.

இதில் நந்தி பெருமானுக்கு, பால், பன்னீர், மஞ்சள், சந்தனம், தேன், இளநீர், எலுமிச்சை, தயிர், அபிஷேக பொடி உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து நந்தி பெருமானுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.

# திருக்குறுங்குடி திருமலை நம்பி கோவிலுக்கு செல்ல பக்தர்களுக்கு அனுமதி வனத்துறை நடவடிக்கை

களக்காடு: நவ.12

நெல்லை மாவட்டம், களக்காடு அருகே உள்ள திருக்குறுங்குடி மேற்கு தொடர்ச்சி மலையில் அடர்ந்த வனப்பகுதியில் திருமலைநம்பி கோவில் உள்ளது. 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றாக திகழும் இக்கோவில் ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்ய ப்பட்ட சிறப்புமிக்க தாகும்.

பிரசித்திப் பெற்ற இந்த கோவிலில் சனிக்கிழமைகளில் பக்தர்கள் கூட்டம் குவிவது வழக்கம். மேலும் தமிழ் மாத முதல் சனிக்கிழமை மற்றும் கடைசி சனிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில்



திருக்குறுங்குடி பகுதியில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது.

திருக்குறுங்குடி மேற்கு தொடர்ச்சி மலையிலும் மழை தீவிரமடைந்துள்ளது. எனவே மழையின் காரணமாக வனப்பகுதியில் ஓடும் நம்பியாற்றில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இரு கரைகளையும் தொட்டப்படி காட்டாற்று வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

இதையடுத்து திருக்குறுங்குடி மலையில் உள்ள திருமலைநம்பி கோவிலுக்கு பக்தர்கள் செல்ல நேற்று வனத்துறையினர் தடை விதித்தனர். இது போலஆற்றில்குளிக்கவும் அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கிடையே இன்று மழை இல்லாததால் ஆற்றில் கரைபுரண்ட வெள்ளம் தணிந்தது.

இதையடுத்து திருமலை நம்பி கோவிலுக்கு செல்ல பக்தர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர். மழை மீண்டும் பெய்தால் பக்தர்கள் செல்ல தடை விதிக்கப்படும் என்றும் வனத்துறையினர் அறிவித்துள்ளனர்.

# நகை கடை நடத்தி பல லட்சம் ரூபாய் மோசடி: கடையை பூட்டி விட்டு உரிமையாளர் தலைமறைவு

சேலம், நவ.12

சேலம் சீலநாயக்கன்பட்டி மற்றும் அம்மாபேட்டை சிங்கமெத்தை பகுதியில் வீராணம் அருகே உள்ள வலசையூர் பகுதியை சேர்ந்த ஒருவர் நகை கடை நடத்தி வருகிறார்.

இந்த கடையில் தீபாவளி சீட்டு நடத்தியும், மேலும்தங்க நகை சேமிப்பு திட்டம் மற்றும் தங்க நகை முதலீடு போன்ற கவர்ச்சிகரமான அறிவிப்புகளை வெளியிட்டு வாடிக்கையாளர்களிடம் லட்சகணக்கில் வசூல் செய்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு கடை உரிமையாளர் திடீரென தலைமறைவானார். உரிமையாளர் கடையை திறக்க வராததால் அதிர்ச்சியடைந்த ஊழியர்கள் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சம்பளம் வரும் என எதிர்பார்த்து காத்திருந்த நேரத்தில் ஏமாற்றம் அடைந்ததால் இதுகுறித்து நேற்று மாலை அன்னதானப்பட்டி போலீசில் புகார் செய்தனர்.

இதனிடையே சீலநாயக்கன்பட்டி பகுதியில் உள்ள கடை பூட்டிய நிலையில் இருப்பதால் அதிர்ச்சி அடைந்த வாடிக்கையாளர்கள்கடை முன்பு இன்று காலை முதலே திரண்டனர். பின்னர் தீபாவளி சீட்டு மற்றும் தங்க நகை திட்டங்களை அறிவித்து மோசடி செய்து ஏமாற்றிய உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோஷமிட்டனர். சிலர் கடை மீது கல்வீசி தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.

இதையடுத்து அன்னதானப்பட்டி போலீசார் அங்கு விரைந்து வந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அங்கு வரும் வாடிக்கையாளர்களையும் அவர்கள் சமரசப்படுத்தி வருகிறார்கள்.

கடை ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களையும் அவர்களது செல்போன் எண்களை வைத்து தேடி வருவதாக போலீசார் தெரிவித்தனர்.

மேலும் போலீசார் நடத்திய விசாரணையில் அந்த கடையின் உரிமையாளர் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கவர்ச்சி திட்டங்கள் மூலம் பல கோடி வசூல் செய்து பணத்தை திருப்பி கொடுக்காமல் மோசடி செய்துவிட்டு தலைமறைவானது தெரியவந்தது. தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அம்மாபேட்டை போலீஸ் நிலையத்திலும் முதலீட்டாளர்கள் புகார் தெரிவித்து உள்ளதால் போலீசார் சபரிசங்கரை தேடும்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

# தஞ்சாவூர் பெரிய கோவிலில் பிரதோஷ வழிபாடு

தஞ்சாவூர், நவ.12

தஞ்சாவூர் பெரிய கோவில் உலக புகழ் வாய்ந்தது. கட்டிடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் பெரிய கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள், சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

பெரிய கோவிலில் ஆண்டுதோறும் பல்வேறு விழாக்கள் நடைபெறும்.

இங்குள்ள மகாநந்திக்கு பிரதோஷம் தோறும் சிறப்பு அபிஷேக வழிபாடு நடைபெறும்.

அதன்படி நேற்று பிரதோஷத்தை முன்னிட்டு மகாநந்திக்கு மஞ்சள், பால் உள்ளிட்ட திரவியப் பொருட்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# தீபாவளி பண்டிகை கொண்டாட்டம்: நெல்லை கடை வீதிகளில் அலைமோதிய மக்கள் கூட்டம்

நெல்லை, நவ.12

தீபாவளி பண்டிகை நாளை (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடப்படுகிறது. பொதுவாக தீபாவளி தினத்தன்று அதிகாலையிலே அனைவரும் எழுந்து எண்ணை தேய்த்து குளித்து புத்தாடைகள் அணிந்த பின்னர் பட்டாசுகள் வெடித்து கொண்டாடி மகிழ்வார்கள். பின்னர் வீடுகளில் பாரம்பரிய பலகாரங்கள் செய்து குடும்பத்துடன் சாப்பிடுவார்கள்

இதனால் நெல்லையில் புத்தாடைகள், இனிப்புகள், பட்டாசுகள் வாங்குவதற்காக கடைவீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. வீட்டு உபயோக பொருட்கள் விற்பனை கடைகளிலும் விற்பனை அமோகமாக நடைபெறுகிறது. இன்று தீபாவளிக்கான இறுதி நாள் விற்பனை என்பதால் நெல்லையில் தீபாவளி பொருட்கள் விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

டவுன் ரதவீதிகளில் வாகனங்கள் செல்வதற்கு வழி இல்லாமல் மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக வடக்கு ரதவீதியில் உள்ள ஜவுளிகடைகளில்புத்தாடைகள்வாங்க பெரும்பாலானோர் குடும்பத்துடன் வந்து செல்கின்றனர். மேலும் அங்கு சாலையின் இருபுறமும் உள்ள பிளாட்பார கடைகளில் பொதுமக்கள் ஆடைகள் எடுப்பதற்கு அதிக அளவில் குவிந்து வருகின்றனர். இதனால் வாகன போக்குவரத்து நெரிசலும் அதிகரித்துள்ளது. வண்ணார்பேட்டையிலும் இதே நிலைதான் நீடிக்கிறது. பிரதான சாலைகளில் நீண்ட வரிசைகளில் வாகனங்கள் அணிவகுத்து ஊர்ந்து செல்கின்றன.



நெல்லை சந்திப்பில் இருந்து வண்ணார்பேட்டைக்கு வாகனங்களில் செல்வதற்கு சுமார் அரை மணி நேரமாகிறது.

இதேபோன்று பாளை சமாதானபுரம் உள்ளிட்ட இடங்களிலும், மார்க்கெட் பகுதிகளிலும் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. அங்கு பாரம்பரிய பலகாரங்கள் தயாரித்து விற்பனை செய்யும் கடைகளில் பொதுமக்கள் சென்று சீடை, முறுக்கு, அதிரசம், முந்திரி கொத்து உள்ளிட்ட பலகாரங்களை வாங்குவதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுதவிர வீட்டு உபயோக பொருட்களான டி.வி., பிரிட்ஜ், வாஷிங் மிஷன் உள்ளிட்டவைகள் வாங்குவதற்கும் பாளை முருகன்குறிச்சி பகுதியில் உள்ள கடைகளில் பொதுமக்கள் அதிக அளவில் வந்து செல்கின்றனர். இதனால் வண்ணார்பேட்டை சாலையில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

இதற்கிடையே கூட்ட நெரிசலில் நகை, பணம் திருடு போவதை தடுக்கும் வகையில் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் மகேஸ்வரி உத்தரவின் பேரில், துணைகமிஷனர்கள் ஆதார்ஷ் பசேரா, அனிதா, சரவணகுமார் ஆகியோரின் மேற்பார்வையில், உதவி கமிஷனர்கள், இன்ஸ்பெக்டர் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மாநகரில் 600 போலீசார் மற்றும் பட்டாலியன் போலீசார், ஊர்க்காவல் படையினர் என மொத்தம் 1,000 போலீசாரும், வள்ளியூர், களக்காடு, அம்பை, திசையன்விளை உள்ளிட்ட புறநகர் மாவட்ட பகுதிகளில் போலீஸ் சூப்பிரண்டு சிலம்பரசன் மேற்பார்வையில் 1,500 போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நெல்லை டவுன் ரதவீதிகள், வண்ணார்பேட்டை செல்லப்பாண்டியன் மேம்பாலம், முருகன்குறிச்சி சாலை, சமாதானபுரம் மார்க்கெட் உள்ளிட்ட இடங்களில் ரோந்து ஜீப்புகள், மோட்டார் சைக்கிள்களிலும் போலீசார் ரோந்து சென்று வருகின்றனர்.

மேலும் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளான டவுன்ரதவீதி, வண்ணார்பேட்டை செல்ல பாண்டியன் மேம்பாலம் ஆகிய இடங்களில் தற்காலிக உயர்கோபுரம் அமைத்து, அதில் இருந்து போலீசார் பைனாகுலர் மூலம் கண்காணித்து வருகிறார்கள்.

டவுன் பகுதியில் 100க்கும் மேற்பட்ட கண்காணிப்பு காமிராக்கள் அமைத்து போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பழைய குற்றவாளிகளை எளிதில் அடையாளம் காணும் நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட காமிராக்களும் அமைக்கப்பட்டு கண்காணித்து வருகின்றனர்.

தீபாவளி பண்டிகையை யொட்டி கடந்த சில நாட்களாக இயக்கப்படும் சிறப்பு ரெயில்கள் மூலம் வெளியூர்களில் இருந்து ஏராள மானவர்கள் நெல்லைக்கு வந்தனர். இன்று காலையிலும் ஏராளமான பயணிகள் குடும்ப த்தினருடன் வந்திறங்கினர். அவர்களுக்கு விபத்தில்லா தீபாவளி கொண்டாடுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ரெயில்களில் பட்டாசு கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதால், ரெயில்வே போலீசாரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதேபோன்று சென்னை, கோவை, பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்த சிறப்பு பஸ்கள் மூலமாக ஏராள மானவர்கள் நெல்லை புதிய பஸ் நிலையத்துக்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வதற்காக தூத்துக்குடி, தென்காசி, பாவூர்சத்திரம், சங்கரன் கோவில், ராதாபுரம், திசையன்விளை உள்ளிட்ட பகுதிகளுக்கு கூடுதல் பஸ்கள் இயக்கப்பட்டன. சிலர் வாடகை கார், ஆட்டோ போன்றவற்றிலும் சொந்த ஊர்களுக்கு சென்றனர்.

இதேபோன்று தென்காசி, ஆலங்குளம், சங்கரன்கோவில், பாவூர்சத்திரத்திலும் தீபாவளி பொருட்கள்வாங்குவதற்காக மக்கள் கூட்டம் அலைமோதியது.

# ஷெனாய் நகர், ஆலந்தூரில் 100 படுக்கை வசதியுடன் 2 புதிய ஆஸ்பத்திரிகள் 2 மாதத்தில் திறக்கப்படும்: அமைச்சர் தகவல்

சென்னை, நவ.12

தமிழ்நாட்டில் மழைக்கால நோய்களை கட்டுப்படுத்த வருகிற டிசம்பர் மாதம் வரை ஞாயிற்றுக்கிழமைகளில் 1000 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்தார். நாளை தீபாவளி என்பதால் 3வது மருத்துவ முகாம் இன்று நடத்தப்பட்டது.

அமைந்தகரையில் நடத்தப்பட்டமுகாமைஅமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டார். பின்னர் அவர் கூறியதாவது:

கல்வியும், சுகாதாரமும் இரு கண்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதன்படி மருத்துவ கட்டமைப்புகள் எல்லா நிலைகளிலும் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

வருகிற 15ந்தேதி புதுக்



கோட்டையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பல் மருத்துவ கல்லூரியை முதலமைச்சர்மு.க. ஸ்டாலின் காணொலி வாயிலாக திறக்கிறார்.

தமிழகம் முழுவதும் 708 நலவாழ்வு மையங்கள்தொடங்கதிட்டமிட்டு 500 மையங்கள் திறக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 208ல் 152 நலவாழ்வு மையங்கள் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளன.

இதில் சென்னை ஷெனாய் நகர், ஆலந்தூரில் 2 புதிய மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு மருத்துவமனையும் தலா ரூ.13 கோடியில் கட்டப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனைகள் ஒவ்வொன்றும் 5 மாடிகள் மற்றும் 100 படுக்கை வசதி கொண்டவை.

இது தவிர நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், பி.கே.கார்டன், பி.ஆர்.என். கார்டன், சி.எஸ். நகர், வெங்கடாபுரம், சேத்துபட்டு, முத்தையாமுதலி தெரு, திருவான்மியூர் ஆகிய இடங்களில் அமைக்கப்படுகிறது.

இன்னும் 2 மாதத்தில் இந்த பணிகள் நிறைவடைந்ததும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைப்பார்.

இவ்வாறு அவர் கூறினார். அதை தொடர்ந்து ஷெனாய் நகரில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவமனை கட்டிடத்தை மா.சுப்பிரமணியன் ஆய்வு செய்தார். இதில் மாநகராட்சி கமிஷனர் டாக்டர் ராதாகிருஷ்ணன், எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அனைவரது இல்லத்தில் இன்பமும், உள்ளத்தில் மகிழ்ச்சியும் பொங்கட்டும் ரூபி மனோகரன் எம்.எல்.ஏ. தீபாவளி வாழ்த்து

நெல்லை, நவ.12

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொருளாளரும், நாங்குநேரி தொகுதி எம்.எல்.ஏ.வுமான ரூபி மனோகரன் வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களால் பல்வேறுபட்ட பண்டிகைகள் கொண்டாடப்படுகிறது. அதுபோல தீபாவளிப் பண்டிகையும் இந்தியாவில் ஆண்டுதோறும் விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இருளுக்கு எதிரான ஒளியின் வெற்றியையும், தீமையின் மீது நன்மையையும், அறியாமையின் மீதான அறிவையும் குறிக்கிறது. தீபாவளி அன்று நம் வீட்டையும்,



சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்து அலங்காரம் செய்வது, புத்தாடைகள் அணிவது நம் மனதிற்கு ஒரு மகிழ்ச்சியையும், குடும்பத்தினருடனும், உறவினருடனும் நம் அன்பையும் பாசத்தையும் புதுப்பித்து கொள்ள நல்வாய்ப்பாக உள்ளது.

ஆண்டு முழுவதும் குடும்பத்தினருக்காக உழைப்பவர்களுக்கு இது போன்ற பண்டிகைகள் அவர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை கொடுக்கும். மேலும் இந்நாளில் அக்கம், பக்கத்தினருடன் அன்பையும், மரியாதையையும், வலுவான பிணைப்புகளையும் குறிக்கும் வகையில், பரிசுப்பரிமாற்றங்கள் மற்றும் இனிப்புகளையும், பலகாரங்களையும் பரிமாறிக் கொண்டு வருகிறோம்.

நம் வாழ்வில் இருள் நீங்கி ஒளி உண்டாகுவதை குறிக்கும் விதமாக பட்டாசுகளை வெடித்து கொண்டாடுகிறோம். ஆனால் சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் காற்று மாசுபாடுகளைகருத்தில்கொண்டு பட்டாசுகளை வெடிக்க வேண்டும். பட்டாசு வெடிப்பது என்பது நம் கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக இருக்கும் சூழ்நிலையில், சுற்றுச்சூழல் மாசுபடாத வண்ணமாக பசுமை பட்டாசுகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

தீபாவளி என்பது வெறும் பண்டிகை அல்ல. இது நம் கலாச்சாரத்தோடும், பாரம்பரியத்தோடும் பின்னி பிணைந்துள்ளது. இந்நன்னாளில் அனைவரது இல்லத்தில் இன்பமும், உள்ளத்தில் மகிழ்ச்சியும் பொங்கி, உங்களது ஆசைகளும், கனவுகளும் நிறைவேற இந்த நாள் இனிய நாளாக அமையட்டும் என் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# பா.ம.க.வினர் நூதன முறையில் கண்டன ஆர்ப்பாட்டம்

ஊத்துக்கோட்டை, நவ.12

ஊத்துக்கோட்டை அருகே 1703 ஏக்கர் நிலபரப்பில் அறிவுசார் நகரம்அமைப்பதைஎதிர்த்து பா.ம.க.வினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அருகே உள்ள கல்பட்டு, ஏனம்பாக்கம், மேல் மாளிகைப்பட்டு, செங்காத்தாகுளம், எர்ணாகுப்பம், வெங்கல் ஆகிய கிராமங்கள் உள்ளடக்கி 1703ஏக்கர்நிலப்பரப்பில் விவசாய நிலங்களை கையகப்படுத்தி தமிழ்நாடு அரசு அறிவுசார் நகரம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக பூர்வாங்க பணிகளை தொடங்க ரூ.200 கோடி நிதி ஒதுக்கி



உள்ளது. சிறப்பு அதிகாரிகள் நியமித்துள்ளது. அறிவுசார் நகரம் அமைத்தால் மூன்று போகங்கள் விளையக்கூடிய விலை நிலங்கள், வீடுகள் பாதிப்புஅடையவாய்ப்பு உள்ளது. அறிவுசார் நகரம் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தும், திட்டத்தை எதிர்த்தும் கண்டித்தும் பாட்டாளி மக்கள் கட்சியினர் ஊத்துக்கோட்டை பேரூராட்சிஅலுவலகம்எதிரே நேற்று கண்டனம் ஆர்ப்பாட்டத்தில் நடத்தினர். திருவள்ளூர் வடக்கு மாவட்ட பா.ம.க. செயலாளர்பிரகாஷ்தலைமை தாங்கினார். துணைச் செயலாளர் தனசேகர், இளைஞர் அணி தலைவர் அன்பு, விவசாய சங்கத் தலைவர் முனுசாமி, ஒன்றிய செயலாளர் ஜெயபால், மாவட்ட இளைஞர் அணி செயலாளர் சுதாகர், வன்னியர் சங்க செயலாளர் டில்லிபாபு, ஆவாஜிபேட்டை பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அறிவுசார் நகரம் அமைத்தால் பாதிப்பு அடைவோர் மற்றும் ஏராளமான பா.ம.க. வினர் திருவோடுகளுடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு அறிவுசார் நகரம் அமைதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர்.

# பயிர் காப்பீடு செய்வதற்கான காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும்

தஞ்சாவூர், நவ.13

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டருக்கு, தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவர் ராமச்சந்திரன், மாவட்ட செயலாளர் பாஸ்கர் ஆகியோர் மின்னஞ்சல் மூலம் இன்று காலை அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

தஞ்சாவூர், திருவாரூர் , நாகை, மயிலாடுதுறை உள்பட காவிரி டெல்டா பகுதிகளில் நடப்பாண்டில் சாகுபடி செய்யப்பட்ட குறுவைப் பயிர் போதிய தண்ணீர் வரத்தின்றி பெரும்பாலான ஏக்கர் பயிர்கள் கருகி வீணாகி விட்டன. இந்நிலையில் சம்பா பருவத்திற்காக போதிய தண்ணீர் கிடைக்காததால், சம்பா பருவ சாகுபடி தாமதமாக செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் சம்பா பருவத்திற்கான பயிர் காப்பீடு செய்வதற்கு நவம்பர் 15 வரை செய்யலாம் என அரசு அறிவித்துள்ளது.

பயிர்காப்பீடு செய்வதற்கான சிட்டா அடங்கல் பெறுவதற்கு விவசாயிகள் நிர்வாக காரணங்களினால் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

தற்போது மழை பெய்து வருவதாலும், காவேரி தண்ணீர் ஓரளவு வருவதை நம்பியும் விவசாயிகள் சம்பா சாகுபடியில் இறங்கி உள்ள நிலையில் காப்பீடு செய்வ தற்கான காலக்கெடுவை தமிழ்நாடு அரசும், தஞ்சை மாவட்டம் நிர்வாகமும் பரிசீலித்து மேலும் ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 12.11.2023



## தமிழுக்காக போராடி செத்தவன் ஒருத்தன் இருக்கான் கவனம் ஈர்க்கும் ரெபெல் டீசர்

அறிமுகஇயக்குனர்நிக்கேஷ்இயக்கத்தில்உருவாகியுள்ள திரைப்படம் 'ரெபெல்'. இந்த படத்தில் ஜி.வி. பிரகாஷ் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும், மமிதா பைஜு, வெங்கிடேஷ் வி.பி, ஷாலு ரகிம், கருணாஸ் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஸ்டுடியோ கிரீன் சார்பில் கே.இ.ஞானவேல் ராஜா தயாரித்துள்ள இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.அருண்ராதாகிருஷ்ணன்ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது.

இந்த நிலையில், 'ரெபெல்' படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. கவனம் ஈர்க்கும் வகையில் உருவாகியுள்ள இந்த டீசரை நடிகர் சூர்யா தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.



## போர்க்களமான பிக்பாஸ் வீடு.. உள்ளே செல்லும் ஜெயம் ரவி.. ஏன் இந்த முடிவு?

ஆண்டனிபாக்யராஜ்இயக்கத்தில்சுஜாதாவிஜய்குமார் தயாரிப்பில் ஜெயம்ரவி நடித்திருக்கும் படம் 'சைரன்'. இப்படத்தில்கதாநாயகியாககீர்த்திசுரேஷ்நடித்துள்ளார். யோகிபாபு, சமுத்திரகனி உள்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

குடும்ப அம்சங்களுடன் ஆக்ஷன் திரில்லராக பிரமாண்ட பொருட்செலவில் எடுக்கப்பட்டுள்ள இந்த படத்தில் ஜெயம்ரவி இரண்டு தோற்றங்களில் நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். செல்வ குமார் எஸ்.கே. ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் அண்மையில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'சைரன்' படத்தின் டீசர் இன்று பிக்பாஸ் வீட்டில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. மேலும், இந்த டீசரை நடிகர் கமல்ஹாசன் வெளியிடவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## ஜிகர்தண்டா 3 பார்த்தேன்.. அதிர்ச்சியடைய வைத்த பார்த்திபன்



'ஜிகர்தண்டா' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து 8 வருடங்களுக்கு பிறகு இப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகியுள்ளது. கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள இந்த படத்தில் எஸ்.ஜே. சூர்யா மற்றும் ராகவா லாரன்ஸ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளஇப்படம்நேற்று ரசிகர்களின் கொண்டாட்டத்துடன் திரையரங்குகளில் வெளியானது. மேலும், இப்படம் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இந்நிலையில், இயக்குனர் பார்த்திபன் 'ஜிகர்தண்டா 2' திரைப்படம் பார்த்துள்ளார். இது தொடர்பாக அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஜிகர்தண்டா 3'பார்த்தேன் FDFS என என்றாவது ஒரு நாள் நான் பதிவிடுவேன். காரணம்... ஜிகர்தண்டா 2 நான் விமர்சகன் அல்ல. நிறை குறை சொல்ல! தெரியாமல் போய், போன இடத்தில் பிடித்து விட்டால் அதன் பெயர் பேய்! இது கார்த்திக் சுப்புராஜ் என்ற பேயை பிடித்து போய் தானே படத்திற்கே போகிறேன்.நினைத்தபடியே மனதை உலுக்கி விட்டது.

நண்பர் Mr larence, நண்பர் mr s j surya, நண்பர் சந்தோஷ் நாராயணன், நண்பர் திரு, நண்பர் கதிரேசன், இன்னும் நாயகி உட்பட பலரும் யானை பலத்துடன் மிரட்டுகிறார்கள். மிரட்டும் யானைகளோ நம் கண்களில் நீர் சுரக்க நடிக்கிறார்கள். பெரும்பாலான காட்சிகளில் கரைந்தேன்

Jigarthanda 1 நான் நடித்திருக்க வேண்டிய படம். முதல் பட அறிமுகத்திற்கு முன்பே நண்பர் திரு கார்த்திக் சுப்புராஜை எனக்கு அறிமுகம் என்பதால் கூடுதல் மகிழ்ச்சி தியேட்டரில் வெடித்த கைதட்டல்களை தீபாவளி பட்டாசாக ரசித்தேன்" என்று பதிவிட்டுள்ளார்.

## மாடல் அழகியை திருமணம் செய்யும் காளிதாஸ் பிரமாண்டமாக நடைபெற்ற நிச்சயதார்த்தம்



பிரபல நடிகர் ஜெயராமின் மகன் காளிதாஸ் ஜெயராம். இவரும் நடிகராகவே உள்ளார். இவர் கடந்த 2000 ம் ஆண்டு தனது 7 வயதில் கொச்சு கொச்சு சந்தோஷங்கள் என்ற மலையாள திரைப்படத்தின் மூலம் திரைத்துறையில் அறிமுகமானார்.

என்டே வீடு அப்புவின்டேயும் என்ற படத்தில் நடித்ததன் மூலம் சிறந்த குழந்தை கலைஞருக்கான தேசிய விருதை காளிதாஸ் பெற்றார். அதன் பிறகு பல்வேறு மலையாள திரைப்படங்களில் நடித்தார். தமிழில் மீன் குழம்பும் மண்பானையும், நட்சத்திரம் நகர்கிறது போன்ற படங்களில் நடித்துள்ளார்.

நடிகர் காளிதாஸ் ஜெயராமுக்கும், தமிழ்நாட்டை சேர்ந்த மாடல் அழகியான தாரிணிக்கும் நட்பு ஏற்பட்டது. இருவரும் காதலித்து வந்தனர். தாரிணி மிஸ் யுனிவர்ஸ் இந்தியா2021இன் மூன்றாவது ரன்னர் அப் ஆவார். அவரை தனது குடும்பத்தினருக்கு கடந்த ஆண்டு ஓணம் பண்டிகையின் போது நடிகர் காளிதாஸ் ஜெயராம் அறிமுகம் செய்திருக்கிறார். இந்த ஆண்டு காதலர் தினத்தில் தாரிணியை தனது காதலி என்று அறிவித்தார். இதனைத்தொடர்ந்து இருவரும் பொது மேடைகளில் தங்களை பற்றிய தகவல்களை வெளியிட்டு வந்தனர். சென்னையில் நடந்த விருது வழங்கும் விழாவின் போது தாரிணியை திருமணம் செய்யப்போவதாக காளிதாஸ் தெரிவித்தார். இந்தநிலையில் தற்போது அவர்களது திருமண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்துள்ளது. இதில் இருவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நடிகர் காளிதாஸ்தாரிணிநிச்சயதார்த்தபுகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அவர்களுக்கு சினிமா துறையினர் உள்ளிட்ட கலைத்துறையினர் ஏராளமானோர் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

## வெளியீட்டை ஒத்திவைத்த ஷங்கர்.. பதறிய ரசிகர்கள்




தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகரான ராம் சரண் 'ஆர்.ஆர்.ஆர்' வெற்றியைத் தொடர்ந்து பிரமாண்ட இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் 'கேம் சேஞ்சர்' திரைப்படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில்கியாராஅத்வானி கதாநாயகியாகநடிக்கிறார். மேலும், எஸ்.ஜே.சூர்யா, அஞ்சலி, ஸ்ரீகாந்த், சமுத்திரக்கனி, உட்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிரியேஷன்ஸ் சார்பில் தில் ராஜு தயாரிக்கும் இப்படத்திற்கு தமன் இசையமைக்கிறார். இந்தப் படத்தின் பாடல் காட்சிகளுக்காக மட்டும் ரூ.90 கோடி செலவழிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இப்படத்தின் முதல் பாடலான 'ஜரகண்டி' பாடல் தீபாவளியன்று வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த பாடல் வெளியீடு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அதாவது, தொழில்நுட்பகோளாறுகாரணமாகபாடல்வெளியீடுதள்ளிவைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த பாடல் வெளியிடும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் படக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பாடலுக்காக ஆர்வமாக காத்திருந்த ரசிகர்கள் இந்த அறிவிப்பால் சற்று ஏமாந்துவிட்டனர்.

## துப்பறியும் அதிகாரியாக பாக்யராஜ் போஸ்டர் வெளியிட்ட திரைப்பிரபலங்கள்




இயக்குனர் ராம் தேவ் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'மூன்றாம் மனிதன்'. இந்த படத்தில் இயக்குனர் கே. பாக்யராஜ்துப்பறியும் அதிகாரியாக நடிக்கிறார். மேலும் சோனியா அகர்வால், ஸ்ரீநாத், சூது கவ்வும் சிவக்குமார், பிரணா, ரிஷிகாந்த், ராம்தேவ் ராஜகோபாலன், மதுரை ஞானம் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

இப்படத்திற்கு வேணு சங்கர், தேவ் ஜி இசையமைக்கின்றனர். இதன் மூலம் இவர்கள் இசையமைப்பாளராக அறிமுகமாகின்றனர். பின்னணி இசையை பி.அம்ரிஷ் என்ற புதுமுகம் கவனிக்கிறார். ராம் தேவ் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தின் இணை தயாரிப்பாளராக டாக்டர்.எம் . ராஜகோபாலன், டாக்டர்.டி. சாந்தி ராஜகோபாலன், டாக்டர்.பி அழகுராஜா, மதுரை. சி . ஏ.ஞானோதயா ஆகியோர் இணைந்துள்ளனர்.

சஸ்பென்ஸ் த்ரில்லருடன் உருவாகும் இப்படத்தில் ஒரு குடும்பத்தில் கணவன் மனைவிக்குள்நடக்கும்அன்றாடபிரச்னைகளும்அலசப்பட்டிருக்கிறது. இப்படத்தின் படப்பிடிப்பு தேனி, கொடைக்கானல், சென்னை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நடந்துள்ளது.

இந்நிலையில், 'மூன்றாம் மனிதன்' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. இதனை பிரபல இயக்குனர்கள் எஸ்.பி. முத்துராமன், இயக்குனர் எஸ் .ஏ.சந்திரசேகர், இயக்குனர் பாரதிராஜா ஆகியோர் வெளியிட்டனர்.



## பழம்பெரும் நடிகர் சந்திரமோகன் காலமானார்

பழம்பெரும் நடிகர் சந்திரமோகன் (82) உடல்நலக்குறைவால் காலமானார்.

தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக இருந்தவர் சந்திரமோகன். இவர் 900க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து பல விருதுகளை பெற்றுள்ளார். இவர் 1975ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் நடிப்பில் வெளியான 'நாளை நமதே' திரைப்படத்தில் எம்.ஜி.ஆருக்கு தம்பியாக நடித்து புகழ்பெற்றார். இப்படத்தின் மூலம் இவர் தமிழிலும் அறிமுகமானார். இதேபோல் மறைந்த பழம்பெரும் நடிகர் சிவாஜி கணேசன் மகனாக 'அந்தமான் காதலி' திரைப்படத்தில் சிறப்பாக நடித்திருந்தார். தொடர்ந்து இவர் தமிழில் ஒரு சில படங்களில் நடித்துள்ளார்.

இதயநோய்காரணமாகஐதராபாத்தில்உள்ளதனியார்மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டிருந்தசந்திரமோகன், சிகிச்சை பலனின்றி இன்று (நவம்பர் 11) காலை உயிரிழந்தார். இவரது இறுதிச்சடங்கு ஐதராபாத்தில் நவம்பர் 13 ஆம் தேதி நடைபெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நடிகர் சந்திரமோகன் மறைவுக்கு தெலுங்கு திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## மிட்சேல் மார்ஷ், ஸ்டீவ் ஸ்மித் அதிரடி.. வங்காளதேசத்திற்கு எதிராக ஆஸ்திரேலிய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி



இந்தியாவில் நடந்து வரும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. மராட்டிய மாநிலம் புனேவில் இன்று ஆஸ்திரேலியா வங்காளதேசம் இடையேயான ஆட்டம் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதையடுத்து வங்காளதேச அணி பேட்டிங் செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய தன்சித் ஹாசன் மற்றும் லிட்டன் தாஸ் நிதானமாக ஆடி ஓரளவு ரன் சேர்த்தனர். முதல் விக்கெட்டிற்கு 76 ரன்கள் சேர்த்தனர். அதனை தொடர்ந்து டவுஹிட் ஹிர்டாய் அடித்த அரைசதம் மற்றும் அடுத்தடுத்து வந்த வீரர்களால் வங்காளதேச அணி 300 ரன்களை கடந்தது.

இறுதியாக 50 ஓவர் முடிவில் வங்காளதேச அணி 8 விக்கெட் இழப்பிற்கு 306 ரன்கள் குவித்தது. அதிரடியாக ஆடிய தவ்ஹித் ஹிர்டாய் அதிகபட்சமாக 74 ரன்களும், கேப்டன் நஜ்முல் ஹூசைன் 45 ரன்களும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியை பொறுத்தவரை ஆடம் சம்பா, சீன் அப்போட் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

தொடர்ந்து 307 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக டிராவிஸ் ஹெட் மற்றும் டேவிட் வார்னர் களமிறங்கினர். இதில் டிராவிஸ் ஹெட் 10 ரன்களில் அவுட்டாகி வெளியாற, அடுத்த விக்கெட்டுக்கு மிட்சேல் மார்ஷ் களமிறங்கினார்.

அரை சதம் விளாசிய வார்னர் 53 ரன்களில் கேட்ச் ஆனார். இதையடுத்து ஸ்டீவ் ஸ்மித் மிட்சேல் மார்ஷ் ஜோடி அதிரடியாக விளையாடி ஆஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர். இறுதியாக 44.4 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு ஆஸ்திரேலிய அணி 307 ரன்கள் குவித்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மிட்சேல் மார்ஷ்(177) மற்றும் ஸ்டீவ் ஸ்மித்(63) இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.




## உலகக்கோப்பை கிரிக்கெட்: அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாநியூசிலாந்து மோதல்

இந்தியாவில் நடந்து வரும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இதில் இந்தியா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய அணிகள் ஏற்கனவே அரையிறுதிக்கு முன்னேறிய நிலையில், மீதம் உள்ள ஒரு இடத்திற்கு நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் இடையே போட்டி நிலவியது.

இந்நிலையில் கொல்கத்தாவில் நடைபெறும் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியுடன் பாகிஸ்தான் அணி விளையாடி வருகிறது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி, 9 விக்கெட் இழப்பிற்கு 337 ரன்கள் குவித்தது. விதிகளின்படி பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு தகுதிபெற வேண்டும் என்றால், இந்த இலக்கை 6.4 ஓவர்களில் எட்ட வேண்டும். இதனால் பாகிஸ்தான் அணி அரையிறுதி வாய்ப்பை இழப்பது உறுதியாகிவிட்டது. இதன் மூலம் நியூசிலாந்து அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. இதையடுத்து வரும் 15ந்தேதி மும்பையில் நடைபெறும் முதல் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா நியூசிலாந்து அணிகள் மோத உள்ளன.




## பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டம்; இங்கிலாந்து அணி 93 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் 44வது லீக் போட்டியில் இங்கிலாந்துபாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பேட்டிங் செய்தது. தொடக்கம் முதல் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொண்ட இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 337 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக பென் ஸ்டோக்ஸ் 84 ரன்களும், ஜோ ரூட் 60 ரன்களும், பேர்ஸ்டோ 59 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். பாகிஸ்தான் சார்பில் ஹரீஷ் ராஃப் 3 விக்கெட்டுகளும், முகமது வாசிம், ஷாகீன் அப்ரிடி தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதையடுத்து 338 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி களமிறங்கியது. அந்த அணியில் அதிகபட்சமாக அகா சல்மான் 51 ரன்களும், பாபர் அசாம் 38 ரன்களும், முகமது ரிஸ்வான் 36 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 43.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 244 ரன்கள் எடுத்தது. இங்கிலாந்து அணி இன்றைய போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சாம்பியன்ஸ் கோப்பை தொடருக்கு தகுதி பெற்றுள்ளது. அதே சமயம் உலகக்கோப்பை தொடரில் பாகிஸ்தான் அணியின் அரையிறுதி வாய்ப்பு முற்றிலும் கை நழுவிப்போனது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.